(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **55.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 பெப்ரவரி 23 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

கௌரவ **ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

கௌரவ **மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

கௌரவ **டலஸ் அழகப்பெரும,** மின்சக்தி அமைச்சர்

கௌரவ **உதய கம்மன்பில,** வலுசக்தி அமைச்சர்

கௌரவ **தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **(கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

கௌரவ **எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

கௌரவ **நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

கௌரவ **டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

கௌரவ **வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

கௌரவ **ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

கௌரவ **சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

கௌரவ **நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ **காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ எச். நந்தசேன

கௌரவ கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ ஹரின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ அஜித் ராஜபக்ஷ**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ வருண லியனகே**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த செய்தியை சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2021 பெப்புரவரி மாதம் 17 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**கோட்டாபய ராஜபக்ஷ**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகள் மற்றும் 2021 சனவரி 07 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் தொழில்நுட்பவியல் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு போன்ற குழுக்களில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்: –

1. தொழில்நுட்பவியல் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

கௌரவ சுசில் பிரேமஜயந்த

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ யதாமிணீ குணவர்தன

2. பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ அகில எல்லாவல

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ ரோஹண பண்டார."

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர் —

(ii) 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2020.12.21 முதல் 2020.12.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு; மற்றும்

(iii) 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2021.01.01 முதல் 2021.01.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர் —

(i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் ஷங்கிரி-லா ஹொட்டேல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய 2206/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் சினோலங்கா ஹொட்டேல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய 2206/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 நவெம்பர் 17 ஆம் திகதிய 2202/7 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர் —

(i) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) வர்த்தக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் வருடாந்த அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கையை வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) சுற்றுலாத்துறை அமைச்சர் —

(i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகள்; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொண்ட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) கீழான கட்டளை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே சார்பாக குழு உறுப்பினர் கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபையின் ஆண்டறிக்கை;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ பிரசன்ன ரணதுங்க, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்; மற்றும்

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை சம்மேளனப் பணியகத்தின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) அச்சுவேலி, அச்சுவெலி தெற்கு எனும் முகவரியில் வதியும் திரு. நாகராசா பகீரதனினது 2020.12.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டக்ளஸ் தேவானந்தா சமர்ப்பித்தார்.

(2) (i) காலி, வக்வெல்ல வீதி, இல. 58/8 இல் வதியும் திரு. பீ.ஆர். விமலசேனவினது 2020.11.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) பலபிட்டிய, வெல்லபட பன்சல வீதி, "நிரோசா" எனும் முகவரியில் வதியும் திரு. எம்.ஜி. விஜித் ஜயந்தவினது 2021.01.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா சமர்ப்பித்தார்.

(3) (i) அநுராதபுரம், குருன்தன்குளம், 3 ஆம் ஒழுங்கையில் வதியும் திரு. ஆர்.ஏ. காமினி ரணசிங்கவினது ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கலென்பிந்துனுவெவ, குணுகோனேவ எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எம். அபேசிங்கவினது 2020.08.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) தெக்கட்டன, பெலஹெல, பொல்கொட்டுவ வத்த, இல. 270 இல் வதியும் திரு. ரீ.ஏ.டி.ரீ. சேனாநாயக்கவினது 2020.12.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ செஹான் சேமசிங்க சமர்ப்பித்தார்.

(4) கம்பொல, மஹர, நெட்சா வீட்டு வீதி, இல. 42 இல் வதியும் திரு. எம்.ஏ. சுனில் ஜயலத்தினது 2020.12.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல சமர்ப்பித்தார்.

(5) பண்டாரகம, வேவிட, ஸ்ரீ ராஜ் எனும் முகவரியில் வதியும் திருமதி ஜே. சுவர்ணலதாவினது 2020.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க சமர்ப்பித்தார்.

(6) முந்தலம், பரணன்கட்டுவ எனும் முகவரியில் வதியும் திரு. எம்.ஆர். நியூட்டன் மாரசிங்கவினது 2020.10.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நிரோஷன் பெரேரா சமர்ப்பித்தார்.

(7) தோரயாய, கொஸ்கும்புர எனும் முகவரியில் வதியும் திரு. கே. ஆரியரத்னவினது 2020.12.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜே.சீ. அலவதுவல சமர்ப்பித்தார்.

(8) சுல்தானாகொட, வரக்கபிட்டிய, “பிரதீப்” எனும் முகவரியில் வதியும் திரு. எச்.ஜி. சிரிசேனவினது 2021.01.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ புத்திக பத்திரண சமர்ப்பித்தார்.

(9) ஹோகந்தர, எவரிஹேன, இல. 484/8 இல் வதியும் திரு. குடாகமகே மாலின் அஜந்த பெரேராவினது 2021.01.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜயந்த கெட்டகொட சமர்ப்பித்தார்.

(10) மொனராகவல, ஹிந்திகிவுல, பன்சல முன்னால் வீதி எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.ஏ. தசநாயக்கவினது 2020.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ குமாரசிறி ரத்னாயக்க சமர்ப்பித்தார்.

(11) வத்தேகம, வாவின்ன, வலல வீதி, இல. 11/1 இல் வதியும் செல்வி டி.ஜி.என்.எம். திசாநாயக்கவினது 2020.11.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ குணதிலக ராஜபக்ஷ சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. பாராளுமன்ற அமர்வு (இல. 1 ):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 1.00 வரை இருக்குமாக. பி.ப. 1.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வு (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி, புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. சிறப்புரிமை:** கௌரவ தினேஷ் குணவர்தன வழிமொழிய கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல முன்மொழிந்த பிரேரணை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அவர்களால் 2020 நவம்பர் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1) :** "சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்." எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க பிரேரித்தார். கௌரவ புத்திக பத்திறண அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52(6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**10. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2) :** ""ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ அமரகீர்த்தி அதுகோரள பிரேரித்தார். கௌரவ றோஹண திஸாநாயக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52(6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**11. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3) :** "சிசிர ஜயக்கொடி சியபத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த பிரேரித்தார். கௌரவ றோஹண திஸாநாயக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52(6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

(மு.ப. 11.25 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**12. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. (2021 பெப்ரவரி 10) பிரேரணை மீதானது,— "1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல், ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

அவ்வேளை விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. விவாதம் எதிர்வரும் திகதியொன்றில் ஆரம்பமாகும்.

(பி.ப. 12.15 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**13. ஒத்திவைப்பு :** அவ்வேளை நேரம் பி.ப. 1.00 மணியாகிவிடவே இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.